# 90 மரங்கள் வெட்டி வீழ்த்தப்படும்



கோலாலம்பூர், ஜூன் 28-

கூட்டரசுப் பிரதேசத்தில் குறிப்பாக கோலாலம்பூர் மாநகரில் மிகவும் ஆபத்தானவை என்று அடையாளம் காணப்பட்டிருக்கும் 90 மரங்கள் வெட்டி சாய்க்கப்படும். வரும் ஜூலை மாத இறுதிக்குள் இந்தப் பணி மேற்கொள்ளப்படுகிறது என்று கூட்டரசுப் பிரதேச அமைச்சர் டாக்டர் ஸலிஹா முஸ்தபா தெரிவித்தார்.

கடந்த மாதம் மாநகரில் பலத்த மழை பெய்தபோது புக்கிட் பிந்தாங் வட்டாரத்தில் ஏராளமான மரங்கள் வேரோடு சாய்ந்ததில் பல வாகனங்கள் சேதமடைந்தன. ஒரு வாகனமோட்டி உயிரிழந்தார். இதுபோன்ற சம்பவங்கள் இனியும் தொடராமல் இருப்பதற்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மழை அல்லது பலத்த காற்றின்போது சாய்ந்து விழும் நிலையில் உள்ள மரங்களை



எல்லாம் அடையாளம் காணும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கோலாலம்பூர் மாநகராட்சி மன்றத்தின் அதிகாரிகள் தற்போது ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். அதில் ஒரு கட்டமாக 90 மரங்களை வெட்டி வீழ்த்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்றார் அவர்.